RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222932

OPEN ACCESS

# யானை டாக்டர் சிறுகதையில் ஜெயமோகனின் ஆளுமை

பழனிசாமி [அ, *], பி. உத்திரகுமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ. சா. கோ கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Jayamohan's Personality in the Short Story Yaanai (Elephant) Doctor

A. Palanisamy, [a, *], P. Uthirakumar [a]

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: kpssentamil@gmail.com

Received: 22-09-2022
Revised: 03-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

After the arrival of the British, Tamil literature which was lying dormant, started traveling all over the world on the printing press. Especially the modern literature, which is comprehensible even to the lay people, brilliantly portrays the life of the people without admixture of imagination. In this way, the purpose of this article is to take a closer look at the author's creativity in the short story "Elephant Doctor" in the Aram+ short story collection of the writer Jayamohan. He introduces characters in his work, records hidden histories, tells facts aloud, depicting the chaos of the I.D living people and the fact that the living creatures are greater than humans, the lifestyle of the mountain people, the selfless service, the development of political technology, the intrigues of the medical leaders, the control of scientific notes and other literary resources, and colonialism are the dominant personalities of the Elephant Doctor short story. The conclusion of this article is that if this book is loved and read by fellow human beings, social ills will gradually decrease.

**Keywords:** Elephant Doctor, Jayamohan, Short story, Humans

## முன்னுரை

வானத்தைப்போல் பரந்து விரிந்து தளத்தைக் கொண்டுள்ள தமிழ் இலக்கியம் தற்காலச் சூழலுக்கேற்ப மேலைநாட்டு கலை இலக்கியச் சாரத்தை தன்னகத்தே ஈர்த்துக் கொள்கிறது. தனிமனிதனைத் தயாராக்கும் பல கூறுகளுள் ஒன்று இலக்கியம். இவ்விலக்கியம் சமூக வளர்ச்சிக்கும் பண்பாட்டு உயர்வுக்கும் உதவுகின்றன. கலை இலக்கியப் பண்பானது காலத்தின் சுவடுகளை மட்டுமல்லாமல் ஈகை, அன்பு, கொடை, சமத்துவம் போன்ற விழுமியங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய எழுத்தாளர்கள், பரிணாம வளர்ச்சியில் தமிழிலக்கியத்தை வளப்படுத்தி வருகின்றனர். மேலும் சமுதாய அத்துமீறல்களையும் அவலங்களையும் தம் படைப்பின் மூலம் புலப்படுத்தி மக்கள் மனதில் ஆழமான பாதிப்பை உண்டாக்குகின்றனர். அவ்வகையில் எழுத்தாளர் ஜெயமோகனின் “யானை டாக்டர்” சிறுகதையின் மூலம் அவரது படைப்பாளுமையை சமூக அக்கறையோடு பருந்து பார்வை கொண்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## நோக்கம்

உயிர்களை பாதுகாப்பது மனித அறம். அவ்வற வழியில் மனிதனை செயலாற்றத் தூண்டுவது இலக்கியம். அவ்விலக்கியம் தான் தோன்றிய கால சூழலுக்கேற்ப பல்வகையான கருப்பொருளை

தன்னகத்தே கொண்டு படைக்கப்படுகிறது. இந்திய மொழிகளில் குறிப்பாக தமிழில் மனித குல வரலாற்றையே பெரும்பாலான படைப்பாளர்கள் தம் படைப்பின் மையமாகக் கொண்டுள்ளனர். இத்தளத்தி- ருந்து முற்றிலும் மாறுபட்டவராக, உயிர்நேயம் மிக்கவராக, குறிப்பாக வனவிலங்குகளைப் பாதுகாக்கும் நோக்கில் சமகாலத்தில் எல்லோராலும் அறியப்படுகின்ற ஜெயமோகனின் ஆளுமையை =யானை டாக்டர்+ சிறுகதையின் வழி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## நூல் அறிமுகம்

உயிரினங்கள் வாழ்வதற்கும் வளர்வதற்கும் வனங்கள் மிக முக்கியமானதாக அமைகின்றன. வனங்கள் ஆரோக்கியமான சூழலில் இருந்தால் மட்டுமே வன உயிரினங்கள் வளமாக வாழமுடியும். வனம் மற்றும் வன உயிரினம் அழிவுறாமல் இருந்தாலே மனித இனம் நன்கு வளம் பெறும். சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிக்க பல்வேறு வகையான வனவிலங்குகள் தேவை. வனவிலங்குகள் மனித இனத் தேவைக்காக கொல்லப்படுவதையும், அவர்களது அலட்சியப் போக்கால் எண்ணிலடங்கா விலங்குகள் பாதிக்கப்பட்டு இறந்து போவதையும் நாம் அறிவோம். அவ்வகையில் =அறம்+ சிறுகதை தொகுப்பில் உள்ள =யானை டாக்டர்+ என்ற சிறுகதை வனத்தைப் பற்றியும் அங்கு வாழும் பல்வேறு உயிரினங்களைப் பற்றியும் குறிப்பாக யானையின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான எல்லா படிநிலைகளையும் காட்சிப்படுத்துகிறது. பிரபல எழுத்தாளரும் கதை சொல்லியுமான பவா செல்லதுரை அவர்கள் ஒவ்வொரு இல்லங்களிலும் சமயங்களின் புனிதநூலாகிய பகவத் கீதை, பரிசுத்த வேதாகமம், குரான் போன்ற புனித நூல்களில் இருப்பது போல ஜெயமோகன் அவர்களின் அறம் சிறுகதை தொகுப்பும் மக்களது பயன்பாட்டில் இருந்தால் நாட்டில் வன்முறைகளுக்கு வழியே இல்லை என்கிறார். இதிலிருந்து அறம் சிறுகதை தொகுப்பானது புனிதநூல்களோடு ஒப்ப மதிக்கத்தக்கதென்பதும் காலம் கடந்து அறங்களைப் பறைசாற்றக்கூடியதாகவும் இருக்கின்றது என்ற உண்மை புலனாகிறது.

சுற்றுச்சூழலின் பல்வேறு கூறுகள்




எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் ஏப்ரல் 22, 1962 ஆம் ஆண்டு பிறந்தார். 12 வயது முதலே ரத்னபாலா போன்ற பத்திரிகைகளில் எழுதத் துவங்கினார். 1985 எழுத்தாளர் சுந்தர ராமசாமி அறிமுகமாகி இவரை எழுதத் தூண்டியதன் விளைவாக 1987களில் கொல்லிப்பாவை, கணையாழி போன்ற இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவரத் தொடங்கின. மேலும் கதைகள், கட்டுரைகளை எழுதி வந்த ஜெயமோகன் அவர்கள் திரைக்கதைகளும் எழுதி வருகிறார். இவரது படைப்புகளைப் பாராட்டி பல்வேறு விருதுகள் வழங்கப்படுகின்றன. மேலும் மொழிபெயர்ப்புத்துறையிலும் சிறந்து விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் நவீன தமிழிலக்கியத் துறையில் பன்முக ஆளுமையாகத் திகழ்கிறார். அவரது படைப்புகளில் யானை பற்றிய தகவல்கள் முக்கிய அங்கம் வகிப்பவையாக உள்ளன.

## ஆளுமை விளக்கம்

ஆளுமை என்பது ஒவ்வொரு உயிரினிடத்தும் காணலாகும் தனித்துவமான குணாதிசயமாகக் கொள்ளலாம். இவ்வாளுமை ஆங்கிலத்தில் = பர்ஸனாலிட்டி என்று வழங்கப்பெறுகிறது.

ஒருவன் தனது எண்ணம், பேச்சு, ஆர்வம், மனப்பான்மை மற்றும் தனிப்பட்ட தன் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றல் போன்றவற்றுள் தனது பழக்கவழக்கங்களை வெளிப்படுத்தும் நடத்தைகளின் பண்பே ஆளுமை எனலாம். என்று கலைக்களஞ்சியமான தொகுதி ஒன்றில் =உட்வொர்த் கூறியுள்ளார்.

ஒரு குழுவில் ஒரு தனிமனிதனை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டும் பழக்கம், மனப்போக்கு மற்றும் பற்று ஆகியவற்றினை ஒருங்கிணைத்த அமைப்பே ஆளுமை ஆகும். ஒரு மனிதனின் தனித்தன்மைகளை ஆளுமை எனக் கூறலாம்.

என்று வாழ்வியல் களஞ்சியமான தொகுதி ஒன்றில் ஸ்கியான் கூறியுள்ளார். ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு; Personality, Individuality, முரட்டுத்தனமும் ஆளுமையின் வெளிப்பாடு தான்.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்” (Shaktidasan Subramanian, 1958).

இவ்வாறு அறிஞர்கள், அகராதிகள் மற்றும் இலக்கியம் போன்றவைகள் பலதரப்பட்ட விளக்கங்களை ஆளுமைக்கு தருகின்றனர். இவையனைத்தையும் கூர்ந்துநோக்குங்கால் ஆளுமை என்பது ஒரு மனிதனை பிறரிடமிருந்து சொல், செயல் மற்றும் பண்பால் பிரித்துக் காண்பிக்கும் தன்மையைக் குறிக்கிறது.

இவ்வாளுமைப் பண்பானது ஒரு மனிதனுக்கு சில நேரங்களில் மரபுவழிப் பட்டதாகவோ அல்லது தான் வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் இருந்து கிடைக்கிறது. ஆயினும் ஒரு உயிரி இவ்வுலகில் தோன்றுமிடத்து அது மிக சிறந்த ஆளுமைப் பண்போடுதான் உதிக்கிறது. அவ்வாளுமையை வளப்படுத்தி தான் வாழ்ந்து பிறர் வாழக் கருவியாகப் பயன்படுத்துவது அந்த உயிரினத்தின் தனித்தன்மையே என்று கூறினால் அது மிகையாகாது.

## படைப்பாளுமை

ஒவ்வொரு எழுத்தாளரும் தன் படைப்பின் வாயிலாக இச்சமூகத்தில் காணப்படுகின்ற அழுக்குகளை தூர்வாரும் பணியை செவ்வனே செய்து வருகின்றனர்.

கலை உணர்வுடன் புதிதாக உருவாக்கப்படும் கலை, இலக்கிய வடிவங்களில் ஒன்று படைப்பு என்றும், கலை இலக்கியம் போன்றவற்றை படைக்கக்கூடிய திறன் படைப்பாற்றல் எனவும் க்ரியா தற்காலத் தமிழகராதி, 2011 விளக்கம் தருகிறது. படைப்பு மற்றும் படைப்பாற்றல் சேர்ந்ததே எழுத்தாளரின் படைப்பாளுமை ஆகும். பலதரப்பட்ட சமூகங்களின் அவலநிலையை தம் படைப்பாற்றலின் மூலம் தமிழில் வெளிப்படுத்தக்கூடிய எழுத்தாளர்களை வேதநாயகம் தொடங்கி ஜெயகாந்தன், அகிலன், கி.ரா., சு. வெங்கடேசன், லக்ஷ்மி சரவணக்குமார் என பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். அந்த வரிசையில் ஜெயமோகனும் அடங்குவர்.

## பாத்திரப்படைப்பு அறிமுகம்

ஒரு கதைக்கு, கதைப்போக்கு, கதைப்பின்னல், கதைக்கரு மற்றும் சூழலைவிட கதைமாந்தர்களே உயிர்ப்பைத் தருகின்றனர். வாசகனுக்கு ஓதும்தோறும் உளமினிக்கும், சிந்தனையைத் தூண்டும் பாங்குடையதாய் ஒரு படைப்பு அமையவேண்டுமெனில் அதில் எழுத்தாளர், கதாமாந்தர்களை கதை முழுவதிலும் உயிர்ப்புள்ளவாறு உலா வரச்செய்வதே ஒருவித படைப்பாளுமையாகும்.

நாவல் சிறப்பதற்கு நல்ல பாத்திரங்கள் அமையவேண்டும். கதையின் உயிரோட்டம் பாத்திரங்களே ஆகும் (Arang Subbiah, 2012).

புதினத்தில் பயின்றுவரும் பாத்திரங்கள் கதையைக் கூறும் கருவியாகவும், பொழுதுபோக்கு வடிவமாகவும் கருதாமல் அது மக்களின் வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் கருவியாகவும் அமையவேண்டும் (Thirumalai, 2004).

நான் ஒரு எழுத்தாளனாகப் பணி செய்த காலம் முதுமையிலும் என்னுடைய தெடக்க நிலையாக நான் கருத்துக்களை ஒரு போதும் எடுத்துக்கொண்டதில்லை. மாறாக பாத்திரங்களையே என்னுடைய தொடக்க நிலையாக நான் எப்போதும் எடுத்துக் கொண்டிருக்கிறேன் (Sampathkumar, 1988) கதைகளில் மாந்தர்களை அறிமுகப்படுத்த மூன்று வகை கையாளப்படுகின்றன. அவை,

பாத்திரங்களை நேரடியாக அறிமுகப்படுத்துவது, பாத்திரத்தை நேரடியாக அறிமுகப்படுத்தினாலும் பாத்திரத்தின் பெயரை அப்போது சொல்லாமல் பிறகு சொல்வது, ஒரு பாத்திரத்தைப் பற்றிய செய்திகளை முதல் பிற பாத்திரங்கள் மூலம் தெரிவித்து, அப்பாத்திரத்தை எப்போது சந்திப்போம் என்று படிப்போரை எதிர்பார்க்கச் செய்து, பின்னே அறிமுகப்படுத்துவது இம் மூன்று முறைகளிலும் பாத்திரங்களை அறிமுகப்படுத்தியதில் ஜெயமோகனின் ஆளுமை கோலோச்சியுள்ளது.

“கதைக்கோப்பை விட இன்றியமையாத ஒன்று புனைகதையில் உண்டு. அதுதான் கதைக்கோப்பிற்குப் பொருளையும், சிறப்பையும் உயிரோட்டத்தையும் கொடுக்கிறது. அந்த ஒன்று தான் பாத்திரம்” (Sampathkumar, 1988).

பொதுவாக கதைகள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைக் கொண்டு படைக்கப்படுகின்றன. இவ்வாறு படைக்கப்படும் கதைகள் இச்சமூகத்தில் நெடுங்காலம் வாழ வேண்டுமானால் ஜெயமோகனின் யானை டாக்டர் சிறுகதையில் இடம்பெறும் முக்கியக் கதைமாந்தரான டாக்டர். கிருஷ்ணமூர்த்தி போன்ற உன்னதமான கதைமாந்தர்களின் வாழ்வியலைப் பொறுத்ததாகும்.

நமது சுற்றுச்சூழலானது வனங்களை முக்கிய அங்கமாகக் கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மனிதனின் மேம்பட்ட வாழ்விற்கும் உதவும் வளங்களை பாதுகாக்கவல்ல வனக் காவலர்களை அறிமுகப்படுத்தும் எழுத்தாளர் ஜெயமோகன்,

“என்ன சிக்கல் என்றால் ஏழரைக்கே தூங்குவது வனக்காவலர்களும் தான்” (Jayamohan, 2011)

வனக்காவலர்களின் அலட்சியப்போக்கினை அச்சமின்றி அறிமுகப்படுத்திய இச்செயலானது வாசகர்களிடையே வன அதிகாரிகளைப் பற்றிய புரிதல்களையும் வனத்தை பாதுகாக்க வேண்டிய அக்கறையையும் பிரதிபலிப்பதாக அமைகிறது.

சில கணங்களில் அது என்ன என்று எனக்குப் புரிந்தது, அது ஒரு யானையின் பலநாள் அழுகிய சடலம். அதை வெட்டித்திறந்து விரித்து அவிழ்க்கப்பட்ட கூடாரம் போல நான்குபக்கமும் பரப்பியிருந்தார்கள். அதன் கால்கள் நான்கு நீட்டி விரிந்திருந்தன. துதிக்கையும் தலையும் விரிக்கப்பட்ட தோலுக்கு அடியில் இருந்து நீட்டி தெரிந்தன. யானையின் உடலுக்குள் அதன் அழுகிய சதை எருக்குழி போல சேற்றுச்சகதியாக கொப்பளித்துக் கொண்டிருந்தது. மேலும் சிலகணங்களில் அதில் அசைவுகளைக் கண்டேன். சேறு நுரைக்குமிழிகளுடன் கொதித்துக் கொண்டிருப்பதுபோல தோன்றியது. அது முழுக்க புழுக்கள். புழுக்கள் அவரது கால்களில் முழங்கால்வரை மொய்த்து ஏறி உதிர்ந்துகொண்டிருந்தன. அவ்வப்போது முழங்கைகளிலும் கழுத்திலும் இருந்து புழுக்களை தட்டி உதிர்த்தபடி வேலைபார்த்துக் கொண்டிருந்தார் (Jayamohan, 2011)

அழுகிப்போன யானையின் உடல் கூராய்வின்போது சங்கோஜமே இல்லாமல் பணியாற்றும் விலங்கு மருத்துவ நிபுணர் கிருஷ்ணமூர்த்தியை அறிமுகம் செய்யும் ஜெயமோகனின் ஆளுமை வியக்கத்தக்கது.

ஆனால் அதற்குள்ளாகவே டாக்டர் கே. யானையை பார்த்துவிட்டிருந்தார். குட்டி என்றார். ரெண்டு வயசுக்குள்ள இருக்கும் எங்கே? என்றேன். அதோ என்று சுட்டிக்காட்டிய இடத்தில் சில கணங்களுக்குப் பின் நானும் யானைக்குட்டியைக் கண்டேன். என் உயரம் இருக்கும் என்று தோன்றியது.

சிறிய கொம்புகள் வெள்ளையாக தெரிந்தன. அதன் காதசைவைக்கூட காணமுடிந்தது. இந்த வயசிலே தனியா வராதே என்றார் டாக்டர் கே. வா பார்ப்போம் இருட்டில் வெளிச்சத்தை அடித்தால் அதன்பின் சூழலையே பார்க்க முடியாது போகும் என்பதனால் இருட்டுக்குள்ளேயே சென்றோம். சில நிமிடங்களில் புல்லிதழ்கள் கூட தெரிய ஆரம்பித்தன" (Jayamohan, 2011)

இதுபோல கதைநெடுகிலும் பாத்திரங்களை அறிமுகம் செய்வதில் ஜெயமோகனின் ஆளுமை தென்படுகிறது.

வாசகர்கள் கதைகளை வாசிக்கும்போது கதைமாந்தர்களின் செயல்பாடுகளைக் கொண்டு அவர்களாகவே சிலகணம் வாழும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கதைமாந்தர்களையும் வாசகர்களையும் ஒன்றுபடுத்துவது ஜெயமோகனின் ஆளுமையாக விளங்குகிறது.

## உவமை

தெரியாத ஒன்றை தெரிந்த ஒன்றோடு ஒப்புமைப்படுத்தி விளக்குவதே உவமையாகும். பெரும்பாலும் செய்யுள்களிலே மிகுதியான உவமைகளைக் காண இயலும். கதைகளிலும் உவமையை கையாளுகின்றனர். இப்போக்கு ஜெயமோகன் கதைகளிலும் இடம்பெறுகின்றன.

"என் உடலின் எல்லா செல்களும் நுரையின் குமிழிகள் போல உடைந்து நான் சுருங்கிச் சுருங்கி இல்லாமலாவது போல உணர்ந்தேன்" (Jayamohan, 2011), "பிச்சைக்காரனின் தட்டில் விழுந்த தங்கநாணயம் போல", "கிளர்ச்சியடைந்த குரங்குகள் போல அங்குமிங்கும் தாவி மாறி மாறி கத்திக்கொண்டிருந்தார்கள்", "நானும் அந்த சொல்லில் பனி உலுக்கப்பட்ட மரக்கிளை போல கலைந்து எடையிழந்து சிரித்து விட்டு அவருடன் கிளம்பினேன்".

"நீங்க இங்க கருப்பா ஒரு புளியங்கொட்டை சைசுக்கு ஒரு வண்டு இருக்கிறத பாத்திருப்பேள். உங்க வீட்டுக்குள்ள கூட அது இல்லாம இருக்காது என்றார். ஆமா, அதுகூடத்தான் வாழறதே, சோத்துலகூட கிடக்கும். பாத்து எடுத்துப் போட்டுட்டு சாப்பிடணும். டாக்டர் கே சிரித்து =அந்த வண்டோட புழுதான் நீங்க பாத்தது. வண்டு பெரிய ஆள். புழு கைக்குழந்தை. கைக்குழந்தை மேலே என்ன அருவருப்பு?". 'எல்லா புழுவும் கைக்குழந்தைதான்'.

மனிதர்கள் பெரும்பாலும் வண்டுகளையும், புழுக்களையும் பார்த்து அச்சப்படுவது இயல்பே. ஆனால் அதை ஜெயமோகன் அவர்கள் எளிய உவமையைப் பயன்படுத்தி தம் ஆளுமையை நிலைநாட்டியுள்ளார். இவ்வாறு எழுத்தாளர் புதிய மற்றும் எளிய உவமைகளை டாக்டர் கே. வோடு தொடர்புடைய பிற பாத்திரங்களினூடாக இலை மறையா காய்போல பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பின்னை காலனியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியை 'ஏகாதிபத்தியத்தின் பரவல்' நிகழ்ந்த காலமென்றால், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியை 'பின்காலனித்துவக் கோட்பாட்டின் பரவல்' நிகழ்ந்த காலகட்டம் எனலாம்.

"காலனித்துவம் என்றால் மற்ற மக்களின் நிலங்களையும் வளங்களையும் அடக்கி ஆளுதல் (அ) கட்டுப்படுத்துதல் என்று பொருள் ஆகிறது". "காலனித்துவம் ஏற்பட்டதிலிருந்து தொடங்கிய அனைத்து வகையான விளைவுகளையும் பின்காலனித்துவம்" என்ற சொல் குறிப்பிடுகிறது (Panchangam, 2016).

ஜனநாயக நாட்டில் உரிமையில்லாத அயலவர் வந்து அந்நாட்டினரை அடிமைப்படுத்தும் முறையையே காலனித்துவம் என்கிறோம். அங்ஙனமே அந்நாட்டு மக்கள் தேசியவாத சோசியாலிச மார்க்சீய பொதுவுடைமை போன்ற கொள்கைகளால் ஒன்றிணைந்து விடுதலை வேட்கையை முன்னிறுத்தி சுதந்திரம் பெறும் முயற்சியால் அயலவரை வெல்வர்.

பின்காலனித்துவம் என்ற சொல், சுதேசிய பண்பாட்டின் மீதும், சமூகத்தின் மீதும் காலனித்துவம் ஏற்படுத்திய விளைவுகளை ஆராய்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின், வரலாற்றாய்வாளர்கள் பின்காலனித்துவம் என்கிற சொல்லைச் 'சுதந்திரத்திற்குப் பிறகு' என்கிற காலகட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தினர். இந்தியாவைப் பொறுத்தவரை, 15 ஆகஸ்டு 1947-க்குப் பிறகு உள்ள காலகட்டம் பின்காலனித்துவக் காலகட்டமாகக் கருதப்பட்டது (Panchangam, 2016).

அந்நியர் தான் அடிமைப்படுத்திய அல்லது தனது கட்டுப்பாட்டிருந்தவர்களை விட்டு வெளியே சென்றாலும் தனது மறைமுகமான அதிகாரத்தை ஆட்சிமுறையை கலாச்சாரத்தை, பண்பாட்டை அன்றாட வாழ்வில் கைக்கொள்ள செய்வதே பின்னை காலனித்துவமாகும்.

'யானை டாக்டர்' சிறுகதை வனவிலங்குகள் குறிப்பாக வன அரசனான யானையைப் பற்றியதே. ஆயினும்,

"யூரோபியன் இதழ்களிலே இதைப்பத்தி பேசணும். அவன் சொன்னா இவன் கேப்பான். இப்பவும் அவந்தான் இவனோட மாஸ்டர்" (Jayamohan, 2011)

ஜெயமோகன் அவர்கள் பேனா என்னும் உழியால் டாக்டர். கேயின் வாயிலாக பின்னைகாலனித்துவத்தை அதாவது யானையைப் பராமரிக்கும் முறையைப் பற்றி இந்திய இதழ்களில் வெளிவந்தால் அதை கைக்கொள்ள மாட்டார்கள். அதனால் இந்திய குருவாகிய யூரோபியன் இதழ்களிலேயே வெளியானால் அவர்கள் கைகொள்வார்கள் என தம் படைப்பில் பதிவு செய்துள்ளார். இது அவரது உச்சபட்ச ஆளுமைத்திறனாக உள்ளது.

## உயிர் நேயம்

இக்கதையில் மலைவாழ்மக்கள், மாரிமுத்து, வன அலுவலர், மற்றும் டாக்டர் கே.யின் வாயிலாக உயிர்நேயத்தை ஆசிரியர் கோடிட்டு காண்பிக்கிறார்.

ஒருநாள் முதுமலையில் ஒரு யானை, சுற்றுலா பயணிகளால் மதுகுடித்து எறியப்பட்ட கண்ணாடி குப்பிகளால் காயப்பட்டு இருந்ததையறிந்த குறும்பரின மக்கள், வனஅலுவலர் மற்றும் டாக்டர் கே.யிடம் தெரிவித்தவுடன் இருவரும் மருத்துவ உபகரணங்களுடன் யானை இருக்கும் இடம் நோக்கி காற்றை விட வேகமாக விரைந்தனர்.

அதன்பின்னங்கால் வீங்கி மற்ற கால்களை விட இருமடங்காக இருந்தது. யானையின் காலி பீர்புட்டி ஒன்று முழுமையாக உள்ளே ஏறியிருந்தது. அதைச்சுற்றி சீழ் கட்டி சீழில் புழு வைத்து சிறுதேன்கூடு போல பொருக்கோடியிருந்தது. கத்தியால் டாக்டர் கே. அந்தப்பொருக்கை வெட்டியதும் பெரிய தயிர்க்கலயம் உடைந்தது போல சீழ் வெளியே கொட்டியது. தேன்கூடு போல சிறிய துளையறைகளுக்குள் வெண்புழுக்கள் நெளிந்தன. டாக்டர் அந்த சீழ்பட்ட சதையை முழுக்க சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டி எடுத்தார். புழுக்கள் என் கைகளில் ஏறின. அவற்றை சுண்டி எறிந்தேன். மொத்த சீழையும் வெட்டி வீசியபின் பீர்க்குப்பி ஆழப்பதிந்திருந்த சதையை கத்தியால் அறுத்து எடுத்து வீசி காயத்தை நன்றாக விரித்து புட்டியை உருவி எடுத்தார். ஆச்சரியமாக இருந்தது. கிட்டத்தட்ட என் கையளவு பெரிய புட்டி.

ஒருவாரம் கூட ஆகலை, பொழைச்சுது+ என்றார் டாக்டர் கே. புட்டியை உருவியதும். மேலும் சீழ் கொட்ட ஆரம்பித்தது. அந்தப்பகுதி சதையை முழுக்க வெட்டி, சீவி எடுத்து வெளியே கொட்டினார். சீழ் வாடை குறைந்து குருதிவாடை எழ ஆரம்பித்தது. குருதி ஊறி சிவப்பாக புண்ணை நனைத்து வழிந்து பின் குமிழியிட ஆரம்பித்ததும் தலையணை அளவுக்கு பஞ்சை எடுத்து, அதில் மருந்தை நனைத்து உள்ளே திணித்து இறுக்கி வைத்து பெரிய பேண்டேஜ் நாடாவால் சுற்றிக்கட்டினார். அதன் பசை இறுக்கமாக ஒட்டிக்கொண்டது. அதன் கால் கூடாரத்துணி போன்ற தோ- ன மீது சிறிய எவர்சில்வர் கிளிப்புகளை குத்தி இறுக்கி அதனுடன் பேண்டேஜை சேர்த்து ஒட்டிக்கட்டி இறுக்கி முடித்தார். அதன் மேல் கீழே கிடந்த கரிய சேற்றை அள்ளி நன்றாக பூசி மூடினார்.

யானையின் காதில் அதை திரும்பவும் கண்டுபிடிப்பதற்கான சிக்னலர் கம்மலை குத்தி அணிவித்து விட்டு எழுந்தோம். (Jayamohan, 2011)

ஈரைந்து மாதம் கருவில் சுமந்த தாய்க்கும் பிறப்புக்கு பின் தோளில் சுமக்கும் தந்தைக்கும் ஏதேனும் உடல்நலக் குறைவு ஏற்படுமாயின் அவர்களை கண்டுகொள்ளாமல் மருத்துவ உதவிகள் எதுவும் செய்ய முற்படாமல் இருக்கின்ற பொறுப்பற்ற மானுட சமூகத்தில் டாக்டர் கே-யின் உயிர்நேயம் என்பது வியப்பிற்குரியது. ஆயினும் புத்தியற்ற சுகவாசிகளின் தீய செயல்களினால் ஏற்படும் கொடூரங்களை எடுத்தாண்ட எழுத்தாளரின் நடை நம்மை கதிகலங்க வைக்கின்றன.

## தமிழ் இலக்கிய செல்வாக்கு

தமிழிலக்கிய செல்வாக்கினை மூன்றுவிதமாக, பிற இலக்கியங்களில் ஆளலாம். சொற்களை மட்டும் பயன்படுத்துதல், கருத்துக்களை எடுத்துக்கொள்ளல், செய்யுள் அடிகளை அப்படியே கொடுத்தல் என்ற நிலையுமாம். தமிழ் இலக்கியங்களில் திருக்குறள், சங்க இலக்கியம் போன்றவற்றின் கருத்துக்களை இதன் பின் வந்த நூல்களான காப்பியம், பக்தி இலக்கியம், குறிப்பாக தேம்பாவணி, இரட்சண்ய யாத்திரிகம், சீறாப்புராணம் மற்றும் நவீன இலக்கியங்களையும் எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தமே இல்லாமல் பைரனைப் பற்றி அல்லது கபிலனைப் பற்றி ஏதாவது பேச ஆரம்பிக்கலாம். பைரன் கவிதை ஒண்ணு இருக்கு. =ஒரு நாயின் கல்லறையில் எழுதப்பட்ட வாசகம்+ படிச்சிருக்கியா? இல்லை என்றேன். அவர் காட்டையே சிவந்த முகத்துடன் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு திடீரென்று மந்திர உச்சாடனம் போலச் சொல்ல ஆரம்பித்தார்.

"When some proud son of man returns toearth, Unknown to glory, but upheld by birth..."

நான் அந்த அவ்வரிகளை அவரது முகமாகவே எப்போதும் நினைத்துக் கொள்வேன்.

ஆனால் நாய் வாழ்க்கையில் உன்னத நண்பன்

வரவேற்பதில் முதல்வன்! பாதுகாப்பதில் முந்துபவன்!

அவன் நேர்மை நெஞ்சம் உரிமையாளனுக்கே சொந்தம்,

அவனுக்காகவே உழைக்கிறான் உண்டு உயிர்க்கிறான்!

அந்த வரிகளை நான் டாக்டர் கேயின் வாழ்க்கைப் பிரகடனமாகவே பல முறை நினைத்துக் கொண்டதுண்டு.

சட்டென்று டாக்டர் கே சிரித்து ஒக்கே ஃபைன். இனஃப் ஷேக்ஸ்ஃபியர்... நான் இப்ப வெளியே போறேன். வர்றியா என்றார்.

"வேடிக்கை, தத்துவம், இலக்கியம், அறிவியல் என்று அவரது பேச்சு தாவிக் கொண்டே இருக்கும்".

"சிறுதினை காக்கும் சேணோன் ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை மீன்படு சுடர் ஒளி வெரூஉம்" (Jayamohan, 2011)

தமிழிலக்கியங்களோடு மேலைநாட்டு இலக்கியங்களையும் பரந்துபட்ட தளத்தில் வாசிக்கக்கூடியவராகவும் அவ்விலக்கிய அறத்தை தம் படைப்பில் எவ்வாறு கையாள வேண்டும் என்ற படைப்பாற்றல் உத்திமுறையை அறிந்தவராகவும், இவரது ஆளுமை வாசகர்களிடையே பல இலக்கிய வளங்களை அறிந்து கொள்ளக்கூடிய தூண்டுகோலாய் இருக்கிறார் என்ற உண்மையையும் புலனாய்கிறது. இங்ஙனமே,

“யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற வரிகளுக்கிணங்க சுயநலமற்றவராய் பிற படைப்பாளர்களின் படைப்புகளை அறிமுகம் செய்பவராய் இருக்கிறார். இதன்வழி எழுத்தாளர்களின் மணிமகுடமாய் ஜெயமோகன் இருக்கிறார்.

## கட்டுடைத்தல் (கோவில் யானைகள்)

உலகின் நல வாழ்வுக்கு விலங்குகளின் நல வாழ்வும் இன்றியமையாததாகும். காட்டு விலங்குகளிலேயே தனித்துவமான பேருயிர் யானையே. தாவர உண்ணியான யானை மூங்கிலை முக்கிய உணவாகக் கொண்டு வாழக்கூடிய விலங்கினமாகும்.

ஒருநாளில் முப்பது லிட்டர் தண்ணீர் குடித்து இருநூறு கிலோ உணவு உண்டு ஐம்பது கிலோமீட்டர் நடந்து வாழவேண்டிய உயிர். அப்படி ஐந்து நாட்கள் நின்றால் மெலிந்து உருக்குலைந்துவிடும். இன்று யானை வெறும் அலங்காரத்துக்காகவும் மதச்சடங்குகளுக்காகவும் வளர்க்கப்படுகிறது. மிருகக்காட்சி சாலைகளில் வேடிக்கைக்காக போடப்பட்டிருக்கிறது.

கோயிலிலே யானையை வளர்க்கிறத தடை பண்ணியாகணும். கோயில்கள் யானை வாழறதுக்குண்டான எடமே கெடையாது. யானையோட கண்ணுக்கு பச்சைத்தழையும் மரங்களும்தான் பட்டுண்டே இருக்கணும். அந்தக்காலத்திலேயே யானைய பட்டத்துயானையா வச்சிருந்தாங்க. இன்னைக்கு உண்டக்கட்டி குடுத்து யானைய வளக்கலாம்னு நெனைக்கறானுங்க. பத்து பைசாவ யானை கையிலே குடுக்கறானுங்க அற்ப பதர்கள். நான்சென்ஸ். நீ யாருன்னு உனக்கு தெரிஞ்சா நீ வச்சிருக்கிற அந்த உலோக துண்ட அதுக்கு பிச்சையா போட உனக்கு கை கூசாது? கோயில் யானைகளை மாதிரி இழிவுபட்டு அவமானப்பட்டு பட்டினி கிடக்குற ஜீவன் வேற இல்லை.... கண்டிப்பா தடை செஞ்சாகணும்.

மதச்சடங்குன்னு சொல்லி சிலபேர் அதை எதிர்ப்பாங்க. ஆனா நூறுவருஷம் முன்னாடி பொட்டுக்கட்டுறதையும் அப்டிச் சொல்லித்தான் எதிர்த்தாங்க. யானைய சுதந்திரமா விட்டுரணும். அவன் காட்டோட அரசன். அவனை ஊரிலே போர்ட்டராகவும் பிச்சைக்காரனாகவும் வச்சிருக்கிறது மனுஷ குலத்துக்கே அவமானம். நம்மாளுகிட்ட சொன்னா அவனுக்கு அதெல்லாம் புரியாது. அவனுக்கு எங்க காடு தெரியும்?

இந்திய கோயில்களில் உள்ள இருநூறு யானைகளின் தரவுகளை திரட்டி அவற்றின் உடல்நலக்குறைவுகளையும் மனச்சோர்வையும் பட்டியலிட்டிருந்தார். அவற்றை பராமரிப்பதில் உள்ள ஊழலே முக்கியமான பிரச்சினையாக இருந்தது. தேவைக்கும் மிகக் குறைவான உணவே அவற்றுக்கு வழங்கப்பட்டது. பெரும்பாலும் பக்தர்களின் பிச்சையையே அவை உண்டன. சில பெரும் கோயில்களில் பக்தர்கள் வீசிக் குவிக்கும் எச்சில் இலைகளையும் எச்சில் சோற்றையும் தான் உணவாகக் கொண்டிருந்தன.

ஒரு நாளைக்கு 16 - 18 மணி நேரத்தை தனது உணவு தேடலுக்கு பயன்படுத்துவதோடு 50 கி.மீட்டர் நடைப்பயணம் செய்யும் யானை நிரந்தரமாக ஒரே இடத்தில் தங்கி வாழும் பண்புடையதல்ல. சமயங்களின் அடிப்படையில் மனிதனை பாகுபடுத்தி கட்டுப்படுத்த முயல்வது போலவே விலங்குகளையும் குறிப்பாக யானையை தன் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் தன் கட்டுக்குள் வைத்திருக்கும் மாண்பற்ற செயலை தன்னெழுத்தாளுமையால் கட்டுடைப்பராகத் திகழ்கிறார் ஜெயமோகன்.

## தகவல் களஞ்சியம்

உலகத் தகவல்களை ஒன்றாகச் சேகரித்து மக்கள் பயன்பெறும் வகையில், பல தகவல் களஞ்சியங்கள் உள்ளன. இந்திய மொழிகளிலே குறிப்பாக தமிழில் தான் அதிகப்படியான கலைக்களஞ்சியங்கள் உள்ளன. அந்த வகையில், “பக்கவாட்டில் இறங்கிய கருங்கல்பாவப்பட்ட சாலை

கிட்டத்தட்ட நூறு வருடம் முன்பு வெள்ளைக்காரன் குதிரையில் செல்வதற்காக போட்டது". (Jayamohan, 2011)

உலகப்புகழ் பெற்ற வன ஆவண நிபுணரான ஹாரி மார்ஷல் அவரைப் பற்றி டாக்டர் கே என்ற பேரில் பிபிஸிக்காக ஆவணப்படம் ஒன்றை எடுத்திருக்கிறார். ஒரு சமகால வரலாற்று மனிதர் அவர். அசோகரோ, அக்பரோ, காந்தியோ என்னிடம் பேச ஆரம்பிப்பது போல. எப்படி அதை எதிர்கொள்வது? என்னிடம் சரியான வார்த்தைகள் இல்லை. கிரேட்ஹார்ன்பில், எப்போதும் துணையுடன்தான் இருக்கும் என்று தெரியும். மேலே இருப்பது ஆண்பறவை. அப்படியானால் கீழே எங்கேயோ பெண் இருக்கிறது.

=யூ ஷுட் ரீட் காந்தி… இந்த ஜெனரேஷனோட சிந்தனைகளை பாதிக்கக்கூடிய சக்தி உள்ள ஒரே திங்கர் அவருதான்… எல்லாத்தைப் பத்தியும் ஒரிஜினலா ஏதாவது சொல்யிருப்பார் என்றார். என்னோட ஃபேவரைட் காந்தியும் அரவிந்தரும் தான். அப்றம் கைக்கு கெடைக்கிற எல்லாமே என்றபடி டீயை என்னிடம் கொடுத்தார்.

வேடிக்கை, தத்துவம், இலக்கியம், அறிவியல் என்று அவரது பேச்சு தாவிக்கொண்டே இருக்கும். ஜேம்ஸ்பாண்ட் போல காரில் இருந்து ஹெ- காப்டருக்கு தாவி, பந்து போட்டில் குதித்து, கரையில் ஏரி, பைக்கில் ஆரோகணித்து விரைவது போல எனக்கு பிரமை எழும். அன்று முதல் வாரத்தில் மூன்றுநாட்களாவது அவரைப் பார்க்கச் செல்வேன். புத்தகங்கள் கொடுப்பார். புத்தகங்களைப் பற்றி விவாதிப்பார்.

சமூக வலைதளங்களில் சிந்தனையை சிதறவிட்டு அணுஅணுவாய் தன் வாழ்க்கையை அழித்துக் கொண்டிருக்கும் இளைய தலைமுறையினருக்கு அறிவு புகுத்துவதாய் காந்தியின் வாசிப்பு இடம்பெற்றுள்ளது. எதிர்கால இந்தியாவை வடிவமைக்கக்கூடிய மாணவர்களுக்கு ஏற்புடையதாக இந்நூல் அமைந்துள்ளது. பக்க வரையறையிலும் சொல்லாடலைப் பயன்படுத்துவதிலும் தகவல்களை விளக்குவதிலும் மாமேதைகளை கோடிட்டு காண்பிப்பதிலும் ஜெயமோகனின் ஆளுமைக்கு நிகர் அவரே என்றால் அது மிகைக்கூற்றன்று.

## முடிவுரை

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, தேனி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் யானைகள் வாழும் பகுதிகளாகக் கொள்ளலாம். தேசிய வளங்களைப் பாதுகாக்கும் பன்னாட்டு அமைப்பு உலகின் முக்கிய உயிரினமான ஆசியாவின் அறிதான இனமான இனங்களான வங்கநரி, ஆசிய சிறுத்தை, மார்பில்ட் பூனை, ஆசியச் சிங்கம், இந்திய யானை, ஆசிய காட்டுக்கழுதை, இந்திய காண்டாமிருகம் போன்றவைகள் அழியும் தருவாயில் உள்ளதாகக் கூறுகிறது. எனவே மனித குலத்திற்கு காடுகளையும், எதிர்கால சந்ததியினரையும் காக்க வேண்டிய கடமை உள்ளதால் காடுகளை காக்கும் பேருயிரான யானையை பாதுகாக்கவேண்டும். அதற்காகத்தான் ஆகஸ்ட் மாதம் 12-ஆம் தேதி யானைகளை பாதுகாக்கும் நோக்கில், உலக யானைகள் தினம் கொண்டாடப்படுகிறது. ஆளுமைத்திறனோடு பிறக்கும் மனிதன் தன் முயற்சியால் அவ்வாளுமைத் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் தான் பயன்பெறுவதோடு சமுதாயமும் பயன்பெறச் செய்கிறான். அகராதிகள் மற்றும் அறிஞர்களின் கருத்துக்களை ஒப்புநோக்குங்கால் ஜெயமோகனின் யானை டாக்டர் சிறுகதையில் ஆளுமைத் திறனானது கோலோச்சி இருப்பதை அறியமுடிகிறது. வன அதிகாரிகளின் செயல்களை அவரது பாத்திர அறிமுகத்திலேயே அப்பட்டமாக காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வேலியேபயிரை மேய்வது போல என்ற முதுமொழிக்கிணங்க அதிகாரிகளின் அலங்கோலத்தை எடுத்துரைப்பதன் வாயிலாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார் என்பது உண்மையே. டாப்ஸ்லிப் மற்றும் முதுமலை போன்ற வனப்பகுதிகளில் சுற்றுலா பயணிகள் மற்றும் சுகவாசிகள், IT வாழ் பணியாளர்களின் அலட்சியப்போக்கினால் வனவிலங்குகள் குறிப்பாக யானைகளுக்கு ஏற்படும் அவலநிலையைப் பற்றி யானை டாக்டர் சிறுகதையில் எடுத்தாண்ட ஜெயமோகனின் எழுத்து ஆளுமை நம் அனைவரையும் கதிகலங்க வைக்கிறது. யானை பற்றிய அரிய தகவல்கள் இந்நூலில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. பின்னை காலணியத்துவத்தை பற்றிய குறிப்புகள் இந்நூலில்

இடம்பெற்றிருப்பதால் இன்னும் நாம் அயலவருக்கு அடிமையாக இருக்கிறோம் என்ற உண்மையை அறிவுறுத்துகிறார். அதோடு இந்திய விஞ்ஞானிகள் தன்னையும் தன் அறிவுத்தளத்தையும் நம்பவில்லை என்பது புலனாகிறது. எழுத்தாளர் ஜெயமோகன் தம் நூலில் பிற இலக்கிய வளங்களை எடுத்தாளுகிறார். பரந்துபட்ட வாசிப்பை அதாவது உலக படைப்பாளர்களை அறிமுகம் செய்வதோடு வாசகரிடையே வாசிப்பு திறனை அதிகரிக்கும் சூழலை ஏற்படுத்துவது அவர்தம் ஆளுமைக்கு மிகச்சிறந்த சான்றாகக் கொள்ளலாம். மின் வேலிகள், ரயில் விபத்துகள் என யானைகள் உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பகுதியாக கோவை வனக்கோட்டம் இடம்பெறுகிறது. யானை டாக்டர் சிறுகதை தகவல் களஞ்சியமாக இருப்பது ஜெயமோகனின் ஆளுமைக்கு முக்கிய சான்றாகும். பிற நூல்களை வாசித்து அறிந்துகொள்ளும் தன்மையை யானை டாக்டர் சிறுகதை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வனவிலங்குகளை காப்போம்! வளமான நாட்டை உருவாக்குவோம்!!

## References


Arang Subbiah, (2012), Literary Criticism and Imes and Principles, Bavai Publications, Chennai, India.

Jayamohan, (2011) Aram Short Story Collection, Vamsi Publishing House, Tiruvannamalai, India.

Panchangam, K. (2016), Literary and Critical Theory, Annam Publication, Thanjavur, India.

Sampathkumar, P. (1988) M.W. A Study of Characters in Novels, Rajiv Gandhi Publications, Coimbatore, India.

Shaktidasan Subramanian, (1958), Kalithogai Moolamum Vilakamum, Anbu Publication, Puducherry, India.

Thirumalai, Ma., (2004), Literary Walk, Knowledge Publishing House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License